# யாழ்ப்பாண புரட்டஸ்தாந்து ஆவணகம்

செயற்றிட்ட அறிக்கை

**2020/2021**

**www.noolahamfoundation.org**

# யாழ்ப்பாண புரட்டஸ்தாந்து ஆவணகம்

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | யாழ்ப்பாண புரட்டஸ்தாந்து ஆவணகம் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0017 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | டிசம்பர் 2020 - நவம்பர் 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | யாழ்ப்பாண நூலகம், யாழ்ப்பல்கலைக்கழக நூலகம், நூலக நிறுவனம், பதிப்பகங்கள், எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |

அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.aavanaham.org வழியாகவும் திறந்த அணுக்கத்தில் வழங்கப்படுகின்றன. 2020 வரை நூலக நிறுவனம் 82,000 எழுத்தாவணங்களும் 15,000 பல்லூடக ஆவணங்களுமாக மொத்தம் 97,000 ஆவணங்களை எண்ணிம வடிவங்களில் சேகரித்து இணையத்துக்குக் கொண்டுவந்துள்ளது. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

செயற்றிட்டச் சுருக்கம்

கொலம்பியா பல்கலைக்கழகத்தின் செயற்றிட்டம் ஊடாக பிரித்தானிய நூலக அனுசரணையுடன் யாழ்ப்பாணக் கல்லூரியிலுள்ள அமெரிக்க மிசன் ஆவணங்கள் எண்ணிமப்படுத்தப்பட்டன. அந்த ஆவணவாக்கச் செயற்பாட்டில் நூலக நிறுவனமும் இணைந்து செயற்பட்டது. குறித்த செயற்றிட்டத்தின் ஊடாக எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களின் தொகுப்பே இதுவாகும்.

இலக்குகளும் நோக்கங்களும்

கொலம்பியா பல்கலைக்கழகத்தின் செயற்றிட்டம் ஊடாக பிரித்தானிய நூலக அனுசரணையுடன் யாழ்ப்பாணக் கல்லூரியிலுள்ள அமெரிக்க மிசன் ஆவணங்கள் எண்ணிமப்படுத்தப்பட்டன. (EAP 835 & EAP 971) இச்செயற்றிட்டத்தில் நூலக நிறுவனம் உள்ளூர் இணைப்பாளராக செயற்பட்டமையால் அதன் ஒரு பிரதியினை பெற்றுக்கொண்டது. அவற்றை எமது வலைத்தளைத்தில் பதிவேற்றல் இச்செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கமாக அமைந்தது.

செயற்பாட்டு முறைமை

இச்செயற்றிட்டமானது பிரதானமான பின்வரும் படிமுறைகளைக் கொண்டுள்ளது.

1. ஆவணங்களைச் சேகரித்தல்: கலநிதி மார்க் மற்றும் குதர்சன் ஆகியோரமிருந்த ஆவணங்களும் நிறுவனங்களிடமிருந்த ஆவணங்களும் காப்படி எடுத்து சேகரிக்கப்படுகின்றன.
2. அணுக்கப்படுத்தல்: எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களைச் சரிபார்த்து உரிய விபரத் தரவுகளுடன் இணையத்தில் கிடைக்கச் செய்தல்.ஆவணங்களை நூலக நிறுவன முறைமைக்கு ஏற்ற வகையில் ஒழுங்குபடுத்தல்
3. மீதரவு இற்றைப்படுத்தல்; ஆவணங்களுக்கான மீதரவு இற்றைப்படுத்தல் செய்யப்பட்டது.
4. நிறைவுசெய்தல்: எண்ணிமப்படுத்த ஆவணங்களைப் பிரதியெடுத்துக் காப்புப்படிகளை உருவாக்குதலும்வலைவாசல் ஒன்றினை உருவாக்கி அவற்றை இணைத்தல் ஆகிய செயற்பாடுகள் இத்திட்டம் மூலம் இடம்பெற்றன.

அடைவுகள்

ஆவணங்களின் எண்ணிக்கைகள்

| இல. | மாதங்கள் | ஆவணங்கள் |
|---|---|---|
| 1 | டிசம்பர் 2020 | 29 |
| 2 | ஜனவரி 2021 | 73 |
| 3 | ஒக்டோபர் 2021 | 160 |
| 4 | நவம்பர் 2021 | 62 |
| | மொத்தம் | 324 |

மொத்தமாக இச்செயற்றிட்டம் ஊடாக **324** ஆவணங்கள் வலைவாசல் உருவாக்கப்படு இணைக்கப்பட்டன**.**

வலைவாசல்

எதிர்கொண்ட சவால்கள்

- காப்புப்படி பெறுவதற்கான கால அளவுகள் ஆறு மாத காலம் வரை நீண்டமை
- இவ்வாண்டில் கோவிட் காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக மூன்று மாதங்கள் முழுமையாக வேலைகளை தொடர முடியாத நிலைமை காணப்பட்டது.
- புதிய அலுவலக இடமாற்றம் ஓர் சாவலான காரணியாக அமைந்தது.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- எதிர்வரும் காலங்களில் இவ்வாறான இணை செயற்றிட்டங்களினை அவ்வாண்டே நிறுவனத்திலும் முன்மொழிந்து ஒரு காலப்பகுதில் செயற்படுத்தல்.
- ஆவணச் சேகரிப்பிலும் எண்ணிமப்படுத்துவதிலும் எத்தகைய ஆவணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற்கான திட்டமிடல்கள் அவசியம்
- ஆவணகத்திலுள்ள பெயரிடல், சேகர ஒழுங்குபடுத்தல் முழுமைப்படுத்தப்பட வேண்டும்